மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

பேச்சுப் போட்டி
2023

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# ஆண்டு 7

மதிப்பிற்குரிய அதிபர், தலைவர் மற்றும் நிர்வாகத்தினர்களே !
நாம் சொல்லுகின்ற பாங்கும், பொருளும் சுவைபட அமைகின்றதா
என தெரிவு செய்ய வந்திருக்கும் நடுவர்களே, அறிவில் சிறந்த ஆசிரியர்களே,
சக மாணவர்களே, பெற்றோர்களே வணக்கம்.
இன்று என் தலைப்பு

# நன்றி மறவேல்

ஒருவர் எமக்கு செய்த உதவியை நாம் என்றென்றும் மறக்காமல் இருத்தல் நன்று. ஐந்தறிவுள்ள விலங்கினங்கள், பறவைகள் போன்றவை “நன்றி மறவேல்” என்னும் பண்பை இயற்கையாகவே பேணிவருகின்றன. ஆனால் ஆறறிவுள்ள மனிதர்களாகிய எம்மில் சிலர் நன்றியினை மறந்துவிடுகின்றனர்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு” என திருவள்ளுவர் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அதாவது செய்த நன்றியை மறந்தவருக்கு வாழ்க்கையில் உயர்வு கிடையாது என்று அழகுற எடுத்துரைக்கின்றார்.

அதுமட்டுமல்ல மாசு அற்றவர்கள் உறவை மறக்கவேண்டாம், துன்பம் ஏற்படும்போது நம்மை விட்டு விலக நினைக்காதவர்கள் நட்பை ஒருபோதும் மறக்ககூடாது என்பதை
“ மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு” என்னும் குறள் தெளிவாக எடுத்து காட்டுகின்றது.

எனவே மாணவர்களாகிய நாம் சிறுபராயத்தில் இருந்தே
“நன்றி மறவேல்” என்பதற்கிணங்க செயற்படுவோமாக!!!

நன்றி, வணக்கம்



ஆக்கம் :
ஆசிரியர் திருமதி. இராஜேஸ்வரி குலவீரசிங்கம்.